மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலவகை ஏற்றுமதி ஆடைகளை ஏற்றுமதி செய்ய இங்கிலாந்தில் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளதே, அந்தத் தடை அகற்றப்பட்டுவிட்டதா? தடை விதிக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தக்க பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 29, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

29—

கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட கடன் வழங்க நிபந்தனையை நீக்குதல்

***23768-திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலமாக வீடு கட்ட கடன் பெறுவதற்கு மனுதாரர்களின் வீடுகளுக்கு கால்கோள் கட்டிடப் பணி நிறைவேறிய (Foundation) பின்புதான் கடன் வழங்க கட்டிடச் சங்கங்கள் நடவடிக்கை எடுப்பதால், நடுத்தர மக்கள் பெரும் அவதிக்குள்ளாவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நிபந்தனையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலமாக வீடு கட்ட கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்புதான் கட்டிடம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படுகிறது. கடன் தவணைதான் அடித்தளம் போட்ட பிறகு வழங்கப்படுகிறது.

1994 நவம்பர் 7]

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்தபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே 1992-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை, எளிய மக்களின் வீடுகளுக்கு 3,000 ரூபாய் இலவசமாகவும், 6,000 ரூபாய் லோனாகவும் வழங்கியதற்கு மாவட்ட அனைத்து மக்கள் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அஸ்திவாரம் போட்டதற்குப் பின்னால்தான் பணம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். உண்மையிலேயே அந்த லோன் கேட்கிறவர்கள் எல்லாம், அவர்களுடைய அந்த நிலத்தையும், கட்டப்போகின்ற வீட்டையும் அடமானம் வைத்து அதற்குத் தேவையான 7% மூலதனத்தையும் அளித்ததற்குப் பின்னால்தான் அந்த அஸ்திவாரம் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அஸ்திவாரம் போட வேண்டுமென்று சொன்னால் 40 சதவீதப் பணம் தேவைப்படுகிறது. இந்த 40 சதவீதப் பணத்தை ஏழை, எளியவர்கள், வசதியில்லாதவர்கள் போட்டு, அஸ்திவாரம் போட இயலாத காரணத்தால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டோம். மீண்டும் பெரிய மனது செய்து, வீடு கட்ட லோன் கேட்பவர்களுக்கு இந்த 40 சதவீதம்—அஸ்திவாரம், பவுன்டேஷன் கட்டாமலேயே லோன் வழங்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்குக் கடன்கள் வழங்குகிறபோது முழுத் தொகையையும் கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் வழங்குவது கிடையாது. அந்தக் கடன் தொகையில் 60 சதவீதம், 70 சதவீதம் இன்றைக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. எனவே, இந்த நிபந்தனையைத் தளர்த்தி, ஆரம்பத்திலேயே, அதாவது அடித்தளம் அமைப்பதற்கே கடன்கள் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிபந்தனை நீக்கப்பட இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், வேறு வகையில் அந்தப் பணத்தை உபயோகித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதன் காரணத்தால் அரசாங்கத்தின் நோக்கம் பரிபூரணமாக நிறைவேற இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதால் இந்த நிபந்தனையை நீக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த

[*1994 நவம்பர் 7*

நிபந்தனையை நீக்க இயலாது என்று கூறினார்கள். ஆனால், இந்தக் கடன் தொகையை 3 தவணையாக இப்போது கொடுத்து வருகிறார்கள். அதனை 2 தவணையாக வழங்க அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று தவணையாக வழங்குவது ஏன் என்றால் ஒவ்வொரு கட்டமாக அவர்கள் உண்மையிலேயே கட்டிடத்தைக் கட்டி இருக்கிறார்களா என்பதைச் சரிபார்த்து அதன்மூலமாக வழங்கவேண்டும் என்பதற்காகத்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துப்படி இரண்டு தவணைகளில் அந்தக் கடன்களை வழங்கவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் போதிய நிதியாதாரங்கள் இருக்குமேயானால் அது குறித்து வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜெனரலாக ஹவுஸிங் லோன் பற்றிச் சொன்னார்கள். அது நல்ல திட்டம்தான். ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் 92-ல் வெள்ளம் வந்தது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு வசதி கிடையாது என்பதால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தக் கடன் தொகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதன் காரணத்தால் ஸ்பெஷல் கேஸ்-ஆகக் கருதி அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்காக என்று தனி ஆணை போட முடியுமா என்பதுதான் கேள்வி. இப்போது நீங்கள் 75 சதவீதம் பணத்தைக் கொடுத்தால் கூட அவர்களிடத்தில் கட்டுவதற்குக் காசு கிடையாது. ஃபவுன்டேஷன் போடுவதற்குக் கூட அவர்களிடத்திலே காசு கிடையாது. இன்றைக்கு அநாதைபோல் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனை ஒரு ஸ்பெஷல் ஸ்கீமாக ஒரு ஜி.ஓ. போட்டு அந்த நிபந்தனையை 'வித்ட்ரா' பண்ணுவதற்குரிய வகையில் ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று போடப்பட்டதே ஒரு தனி ஆணைதான். புயல் வெள்ளத்தால்

1994 நவம்பர் 7]

பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு 9000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கருணை உள்ளம் கொண்ட இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அறிவித்திருக்கிறார்கள். எனவே, கடன் கொடுப்பதற்குத்தான் தனி ஆணை போட முடியுமே தவிர கடன் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட பகுதியாகக் கருதி நிபந்தனையைத் தளர்த்த இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ.சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்குவதைப் பொறுத்தவரையில் ஃபவுண்டேஷன் போட்டதற்குப் பிறகுதான் கடன் வழங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி படிப்படியாகத் தவணை முறையில் இந்தக் கடன் வழங்கப்படுகிறது. அப்படி இருந்தும் சில சமயங்களில் கட்டிடம் முடிந்த பிறகுகூட அந்தக் கடன் மக்களுக்கு வந்து சேருவதில் தாமதம் ஆகிறது. ஆகவே, அந்தத் தவணைகளையாவது, கட்டிடத்தை முடிப்பதற்குள்ளாக வழங்குவதற்கு திறமை மிக்க எங்கள் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அப்படி எங்கேயாவது கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகும் கடன் தரப்படாமல் இருக்குமேயானால் அதுகுறித்துத் தனிப்பட்ட புகார் கொடுத்தால் உடனடியாக அவர்களுக்கு உரிய நிவாரணம் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மிகவும் ஏழைகளாக இருக்கின்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் கூட்டுறவு வங்கிகளுக்குச் சென்று வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக 6 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் பெறுகிறார்கள். ஆனால், 40 சதவீதம் தொகையைச் செலவு செய்து அஸ்திவாரம்

போடுவதற்கான பண வசதி அவர்களிடத்தில் இல்லாத காரணத்தால் பல லேவாதேவிக்காரர்களிடம் சிக்கிக் கொண்டு குரங்கு கையில் சிக்கிய பூ மாலை போல் ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி: அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற நிலையில் கூட்டுறவுக்காக இன்றைக்கு ஏராளமான நல்ல பல புதிய திட்டங்களைப் புகுத்தி சிறப்பாகச் செய்துகொண்டு வருகிற இந்த நேரத்தில் ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்குரிய வகையில் அவர்களுக்காகத் தனிப்பட்ட முறையில் தனிச் சலுகைகளை வழங்கவேண்டும். ஏனென்றால் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்கி பணக்காரர்களும் வீடு கட்டுகிறார்கள், ஏழைகளும் கட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாக கேள்வியாகக் கேளுங்கள்.

முற்பகல் 10–40

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் காலத்தில் இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே சொல்லி, இப்போது ஒரே தவணையில் அடித்தளம் போட்டதற்குப் பின்னாலே கொடுக்கிறார்கள். அதை அடித்தளம் போடுவதற்கு முன்னாலே இரண்டு மூன்று தவணைகளில் கொடுத்து அந்த வீடுகளைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலமாக 11,000 ரூபாய் கடன் என்பது மிகவும் ஏழைகளாக உள்ள மக்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. பணக்காரர்களுக்கு அந்தக் கடன் வழங்கப்படுவதில்லை. இன்றைக்கு வீடு கட்டுவதற்கு அடித்தளம் அமைக்க வேண்டும் என்கின்ற நிபந்தனை விதிக்கப்பட்டதினுடைய நோக்கமே அவர்கள் பெறுகின்ற கடனுக்கு உண்மையிலேயே அவர்கள்

1994 நவம்பர் 7]

வீடு கட்டவேண்டும் என்பதற்காகத்தான். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கமே "ஒரு குடும்பம் ஒரு வீடு" என்கின்ற தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். அதுதான் வீட்டு வசதித் துறையினுடைய நோக்கம் ஆகும். எனவே, அடித்தளம் அமைக்காமல் அவர்களுக்குக் கடன் கொடுக்கின்ற சூழ்நிலை உருவானால் அவர்கள் அந்தக் கடன் தொகையைப் பெற்றுக் கொண்டு வேறு உபயோகங்களுக்கு அவற்றை மாற்றி அமைத்துக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால் வீடு கட்டும் லட்சியம், அவர்கள் சொந்த வீடு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற லட்சியம் நிறைவேறாமல் போய்விடும். எனவே, அந்த நிபந்தனையைத் தளர்த்த இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 30, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 31, திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

31—

தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகளிடம் விற்பனை வரி வசூலித்தல்

**10243–திரு. ஆர். ஈஸ்வரன்:*

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.74/- விவசாயிகளிடமிருந்து விற்பனை வரி வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ரூ.24-ஐ அரசு பிடித்தம் செய்துகொண்டு மீதி ரூ.50-ஐ ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கரும்புக்கு விற்பனை வரி விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.